பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 01 | வெள்ளிக்கிழமை | 18.08.2023 | கதிர் 280

# குருந்தூரில் பதற்றம்

## அங்கு அணி திரள சிங்கள, தமிழ் தரப்புகள் அழைப்பு

(ந.லோகதயாளன்)

குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தில் அண்மையில் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்ட பொங்கல் நிகழ்வு இன்று மீண்டும் இடம்பெறவுள்ளது என்று தமிழர்கள் அறிவித்த நிலையில், அதனைத் தடுத்து நிறுத்த சிங்கள மக்களை அணி திரளுமாறு அழைப்பு விடுத்திருப்பதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பொங்கல் நிகழ்வுக்கு எதிராக சிங்களவர்களைத் திரண்டு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் கம்பன்பில அழைப்பு விடுத்தி ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

அரசியல் கள நிலவரம் சாதமாக இல்லாத போதும், தன்னை ஜனாதிபதியாக்கி நாடாளுமன்றத்தில் தனக்கு ஆதரவளித்துவரும் பொது ஜன பெரமுன ஆதரிக்காதபோதும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒற்றைக்காலில் நிற்பதற்கு (அது நடக்காது என்பது வேறுவிடயம்) ஏதாவது காரணம் இருந்தாகவேண்டும். சோலியன் குடும்பி சும்மா ஆடாது என்னும் போது, தந்திரக்கார சோலியன் குடும்பி மட்டும் சும்மா ஆடுமா?

அப்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஐத் தீவிரமாகக் கையில் எடுத்திருப்பதாகக் காட்டுவதற்குப் பின்னால் என்ன திட்டம் இருக்கின்றது என்று நேற்று வெளிப்படுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத்.

இராஜகிரியவில் நேற்று சுதந்திர மக்கள் சபையின் தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்கள் மத்தியில் ரணிலின் உள்வீட்டுத் திட்டங்கள் குறித்து அவர் தெரிவித்தவற்றை அப்படியே வாசகர்களின் கவனத்திற்குத் தருகின்றேன்.

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவைச் சேர்ந்த 45 பேரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்வசம் ஈர்த்துக்கொள்ள முயற்சிக்கிறார். அதற்காக அவர்களுக்கு மாகாண சபைகளில் அமைச்சு பதவிகளை வழங்கவே ஜனாதிபதி, 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அது தொடர்பான யோசனைகள் குறித்த வாதவிவாதங்களை உருவாகியுள்ளார்.

இதன் மூலம் ஜனாதிபதி ரணில் ☞ 2

# வழிபாடுகளைத் தடுக்கும் உரிமை எவருக்குமில்லை

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

இந்த நாட்டில் மத வழிபாடுகளைத் தடுக்க எவருக்கும் உரிமை கிடையாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

குருந்தூர்மலையில் இன்று தமிழர்கள் பொங்கல் நிகழ்வுகளை மேற்கொள்வதைத் தடுக்கும் வகையில் சிங்களவர்களை அங்கு திரண்டு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பில அழைப்பு விடுத்திருப்பது தொடர்பாகவும் மணலாறு (வெலிஓயா) கிராமத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பது தொடர்பாகவும் அவரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். ☞ 2

## கொழும்பில் 18 மணி நேர நீர் வெட்டு

(பி.எம். முக்தார்)

மின்சார சபையின் பராமரிப்பு வேலைகள் காரணமாக அம்பதலே நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு விநியோகிக்கப்படும் மின்சார விநியோகம் தடைப்படுதல் மற்றும் அத்தியவசிய உள்ளக விவரிவாக்கப் பணிகள் காரணமாக நாளை சனிக்கிழமை மு.ப. 8 மணி முதல் ஓகஸ்ட் 20 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணி வரையிலான 18 மணிநேரத்திற்கு கொழும்பில் நீர் விநியோகத் தடை நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு ☞ 2

## கடன் சவால்களைத் தீர்க்க சீனா இலங்கைக்கு உதவும்

### அந்நாட்டு அயலுறவு அமைச்சர் உறுதிமொழி



நிதிக் கடன் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்கு இலங்கைக்கு சீனா உதவுமென சீனாவின் கம்யூனிஸ்ட்கட்சியின் வெளியுறவு ஆணைக்குழு அலுவலகத்தின் பணிப்பாளரும் சீனாவின் அயலுறவுத்துறை அமைச்சருமான வாங் யீ தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள குன்மிங்கில் ஏழாவது சீன-தெற்காசிய எக்ஸ்போ நிகழ்வில் கலந்துகொள்ள சென்றுள்ள பிரதமர் தினேஷ் குணவர்தனவுடனான சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீனா எப்போதும் இலங்கையின் நம்பகமான மூலோபாய பங்காளியாக இருப்பதுடன், இலங்கை எப்போதும் சீனாவுடன் நட்பு நாடாகவே இருந்து ☞ 2

## ஹிந்தி, சீன மொழிகளை மாணவர் கற்கவேண்டும்

### ஜனாதிபதி வலியுறுத்து

(நலோகதயாளன்.)

மாறிவரும் உலகுடன் இசைவாக்கம் அடைய இலங்கை சிறுவர்கள் எதிர்காலத்தில் ஹிந்தி மற்றும் சீன மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நுகேகொடை அனுல வித்தியாலய பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே ☞ 2

## கர்ப்பப்பை குழாய் வெடித்து பெண் சாவு

கர்ப்பப்பை குழாய் வெடித்து யாழ். குடாநாட்டில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் புலோலியை சேர்ந்த, மன்னார் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியரான அனுசன் துளசி (வயது 30) என்பவரே நேற்றையதினம் புதன்கிழமை இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திடீர்வயிற்றுவலியினால் துடித்த அவரை உறவினர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர், ☞ 2

### விளையாட்டுப் போட்டியில் அசம்பாவிதம்

## நீர்நிலையினுள் வீழ்ந்து 2 மாணவர் பரிதாபச் சாவு

### வவுனியாவில் நேற்றுச் சம்பவம்





வவுனியா வலய மட்ட விளையாட்டு போட்டி வவுனியா பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற போது, அங்கிருந்த நீர்நிலையில் தவறி வீழ்ந்த இரு மாணவர்கள் பரிதாபரகமாக உயிரிழந்தார்கள். வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலத்தை சேர்ந்த 14,15 மாணவர்களே இந்த சஅசம்பாவிதத்தினுள் சிக்கி உயிழிந்தனர்

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வலய மட்ட விளையாட்டு போட்டிகள் கடந்த இரு தினங்களாக பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைகழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வந்தன.

மைதானத்தில் ☞ 2

# ஜனாதிபதி செயலகம் அருகே நேற்று திடீர்ப் பதற்ற நிலை

தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பினர் கலந்துரையாடலுக்கு அனுமதி கோரி ஜனாதிபதி செயலகத்திற்குள் நேற்றையதினம் செல்ல முனைந்தமையால் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவருடன் கலந்துரையாடுவதற்கு அவர்கள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அறிவித்துவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர்.

தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் சுமார் 200 உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகே சென்று, ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர் அல்லது பொறுப்புக்கூற வேண்டிய ஒருவரிடம் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

எனினும், ஜனாதிபதி செயலகத்தை நெருங்குவதற்குக்கூட அவர்களுக்கு பொலிஸார் இடமளிக்கவில்லை. அத்துடன், காலிமுகத்திடலுக்கு அருகில் உள்ள ஜனாதிபதி செயலகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் பொலிஸார் மற்றும் கலகத்தடுப்புபிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், பாதுகாப்பும் பலப்படுத்தப் பட்டிருந்தது.

பின்னர், ஜனாதிபதி செயலகத்திலிருந்து அதிகாரியொருவர் வருகை தந்து தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். எனினும், ஜனாதிபதி செயலாளருடன் இந்த சந்தர்ப்பத்தில் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு இல்லையென அந்த அதிகாரி அறிவித்தார்.

இதனையடுத்து, தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பினர் அங்கிருந்து கலைந்து சென்றதோடு தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பில் அறிவித்தனர்.

# அமெரிக்க உயர் அதிகாரி நாளை கொழும்பு வருகை

இணைய பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் கொள்கைக்கான அமெரிக்க தூதுவர் நெதானியேல் சி.ஃபிக் ஓகஸ்ட் 20 இலங்கை வரவுள்ளார் எனவும் ஓகஸ்ட் 23 வரை அவர் இலங்கையில் தங்கியிருந்து பல்வேறு சந்திப்புகளில் ஈடுபடவுள்ளார் என்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரச மற்றும் தனியார் துறையின் முக்கிய அதிகாரிகளுடன் இவர் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதுடன், இலங்கையில் டிஜிட்டல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கவுள்ளார்.

இணைய பாதுகாப்பு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் சுதந்திரம் தொடர்பாகவும் அரச அதிகாரிகளுக்கு இவர் ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.

நெதானியேல் சி.ஃபிக், தமது இந்திய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு இலங்கை வரவுள்ளதுடன், ஓகஸ்ட் 17 முதல் 20 வரை இவர் இந்தியாவில் அரச மற்றும் தனியார் அதிகாரிகளுடன் முக்கிய சந்திப்புகளை நடத்தியிருந்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

விக்ரமசிங்க வடக்கு மக்களையும் பொது ஜன பெரமுனவையும் ஏமாற்றியுள்ளார். அத்துடன்ஜனாதிபதி தனது இந்தச் செயற்பாடுகள் மூலம் எண்ணக்கரு ரீதியிலான ஏமாற்று திட்டத்தை முன்வைத்துள்ளார்.

இதற்கு முன்னர் எண்ணிக்கை தொடர்பான ஏமாற்று திட்டங்களே நாட்டில் இருந்தன. அதனையும் ஜனாதிபதி தற்போது புதுப்பித்துள்ளார். இதனால், ஜனாதிபதி மக்கள் ஆணையின்றி செய்து வரும் வேலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் - என்றார்.

...........

நாடாளுமன்றத்தில் சில பெருச்சாளிகளின் விளையாட்டுக்கள் தொடர்பாக முறைப்பாடுசெய்யப்பட்டதை அடுத்து விசாரணைகள் தொடங்கப்பட்டமை குறித்து இந்தப் பத்தியில் விவரங்கள் தெரிவித்திருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

நாடாளுமன்றத்தில் துப்புரவுப் பணிகளுக்கு வரும் அழகானஇளம்பெண்களுக்கு பாலியல் தொல்லை கொடுக்கும் அதிகாரிகள் பற்றிய முறைப்பாடு அது. நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகமாக ஒரு பெண் - அதுவும்சட்டத்தரணி - பதவியில் இருக்கும் இந்தத் தருணத்தில் இந்த முறைப்பாடு மேலெழுந்தது. அதையடுத்து விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. விளையாக அதிகாரி ஒருவர் பணிஇடைநிறுத்தம்செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நாடாளுமன்றக் குழு அறை ஒன்றில் இரண்டுதலையணைகளும் ஒருமெத்தையும்கண்டுபிடிக்கப்பட்டிருக் கின்றன. இவை அங்கு ஏன் வந்தன என்பது தொடர்பில் இப்போது தீவிரமாக விசாரணை நடக்கிறது. இந்த மெத்தை தலையணைகளுக்கும் பாலியல் குற்றச்சாட்டுக்களுக்கும் தொடர்புகள் இருக்கின்றதா என்கிற ரீதியிலும் விசாரணை வளையங்கள் திருப்பப்பட்டுள்ளன.

முன்னர் ஒரு தடவை நாடாளுமன்றத்திற்குள் மெத்தை ஏன் கொண்டுவரப்பட்டது என்று ரணில் விக்கிரமசிங்கவைப்பார்த்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்கேள்விஎழுப்பியதாக எனக்கொரு ஞாபகம். அந்த மெத்தைதானா இந்த மெத்தை என்பதெல்லாம் இனி விசாரணைகளின் முடிவில்தான் தெரியவரும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## குருந்தூரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கிறார். அத்தோடு மணலாறு (வெலிஓயா) கிராமத்தில் சிங்களவர்களை அணிதிரளும்படி அழைப்பு விடுத்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. முகப் புத்தகத்திலும் குருந்தூர் மலை என்ற பக்கத்தில் இது தொடர்பாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதே நேரம் பொங்கலுக்குத் திரண்டு வருமாறு அதனை ஏற்பாடு செய்துள்ள தமிழர் தரப்பினரும் அழைப்பு விடுத்துள்ளனர். தமிழர் மரபுகளைத் காத்து, பௌத்தமயமாக்கத்தை தடுத்திட குருத்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தின் பொங்கல் விழாவில் ஒன்று கூடுவோம் என யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமும் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாறு இருதரப்பினரும் குருந்தூர்மலையில் அணிதிரள சிங்கள, தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதால் பதற்றநிலை தோன்றியுள்ளது.

ஜூலை 14 இதேபோன்று பொங்கல் நிகழ்வை தமிழர் தரப்பு ஏற்பாடு செய்தபோது அங்கு வந்த பிக்கு தலைமையிலான சிங்கள மக்கள் பொங்கலை நடத்தவிடாமல் இடையூறு செய்தனர். இதையடுத்து அங்குபொங்கல்செய்வதற்குத் தடை விதித்த பொலிஸார் அங்கிருந்து தமிழர்களை வெளியேற்றினர்.

இன்றைய பொங்கல் நிகழ்வையும் தடுத்து நிறுத்துவதற்காகப் பொலிஸார் நீதிமன்றத்தில் நேற்று அனுமதி கேட்டபோதும் அது மறுக்கப்பட்டது. பொங்கல் வழிபாட்டை தடுக்க எவருக்கும் எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்று முல்லைத்தீவு நீதிமன்று நேற்றுக்கட்டளையிட்டுள்ளது.

இந்தப் பொங்கல் நிகழ்வால் அங்கு பதற்றம் ஏற்படலாம் என்று பொலிஸார் முன்வைத்த தடையுத்தரவு கோரிக்கையயின் மீதே நீதிமன்றம்இந்தஉத்தரவைப் பிறப்பித்துள்ளது. .

குருந்தூர் மலையில் நாளை பொங்கல் இடம் பெற்றால் இரண்டு குழுவினருக்கிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு, அந்த கருத்து முரண்பாடுஉணர்ச்சிகரமான விடயங்கள் என்பதால் மதக் கலவரமாக உருவாகி உயிர் ஆபத்து ஏற்படுத்தக் கூடும். அந்த இடத்தின் அமைவிடத்தின் அடிப்படையில் அவ்வாறான ஒரு கலவரத்தைதடுப்பதுமிகவும் கடினமாகும் என தெரிவித்து குற்றவியல் நடைமுறை கோவை பிரிவு 106 (01)கீழ் முல்லைத்தீவு நீதிமன்றில் அறிக்கை ஒன்றை நேற்று தாக்கல் செய்து பொங்கல் வழிபாட்டுக்கு எதிராக தடை உத்தரவை கோரினர் பொலிஸார்.

ஆனாலும் புராதன சின்னங்களுக்குபாதிப்புஏற்படாத வகையில் அப்பிரதேச மக்கள் தங்களது மத வழிபாடுகளை வழிபாடுகளை மேற்கொள்ளலாம் எனவும் ஒருவரதுமதவழிபாடுகளுக்கு மற்றைய தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் என்பதற்காக ஒருவரது மதவழிபாடுகளை தடுக்க தடைக் கட்டளை வழங்க முடியாது எனவும் பொலிசாரின் தடையுத்தரவு கோரிக்கையை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்று நிராகரித்துள்ளது.

அத்தோடு பொங்கல் வழிபாட்டை விகாராதிபதி சாந்த போதி தேரரோ அல்லது அவருடன் வரும் குழுவினரோ அருண் சித்தார்த் என்பவரோ அல்லது அவருடன் வரும் குழுவினரோ தடுக்க எந்த விதமான அதிகாரமும் இல்லை எனவும் நீதிமன்று கட்டளை வழங்கியுள்ளது.

இதேவேளை குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலயத்தில் இடம்பெறவுள்ள பொங்கல் விழாவின் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை தொல்லியல் திணைக்களம் கடிதமாக வழங்கியுள்ளது. அதில் திணைக்களம் அடையாளப்படுத்தும் வெளியான, தொல்பொருள்கள் இல்லாத இடத்திலேயே பொங்கல் நடத்தப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்றைய பொங்கலிற்குத் திரண்டு வருமாறு அழைப்பு விடுத்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பௌத்த பேரினவாதத்தின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில் தமிழர் நாம் நமது உரிமைகளை மீட்டெடுக்கவும், எமது மரபுகளை பேணிக்காக்கவும், தமிழ் மக்கள் அனைவரும் குருந்தூர்மலைக்குஇன்றுவருகை தந்து நாம் அனைவரும் ஒரே திரளானவர்கள் என்பதை காண்பிப்பதோடு, பொங்கல் விழாவையும் சிறப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்! இங்கே தமிழர் எம் வரலாறுகளை மறைக்கும், மழுங்கடிக்கும் செயற்பாடுகளை மாணவர் சமூகம் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என அந்த அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே குருந்தூரில் குருந்தி விகாரை அமைக்கப்பட்டது போன்று சைவ ஆலயம் ஒன்றும் பௌத்த, இந்து அமைப்புகளின் பங்களிப்புடன் அமைக்கப்படும் என்று நேற்று யாழ்ப்பாணத்தில் கூடிய சில இந்து, பௌத்த அமைப்புக்கள் அறிவித்தன. இந்தக் கூட்டத்தில் குருந்தி விகாராதிபதியும் கலந்துகொண்டிருந்தார்.

## வழிபாடுகளைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'எமது நாடு ஜனநாயக நாடு. இங்கு இன, மத ரீதியில் வன்முறைகளைத்தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடஎவருக்கும்அனுமதி இல்லை. எந்த மதத்தினரும் எங்கும்சென்றும்சுதந்திரமாக வழிபட முடியும். அந்த வழிபாடுகளைத் தடுக்க எவருக்கும் உரிமை கிடையாது.

இன, மத ரீதியில் வன்முறைகளைத் தூண்டும் வகையில் சிலர் வெளியிடும் கருத்துக்கள் அண்மைய நாட்களாகசமூகஊடகங்களில் வைரலாகி வருகின்றன. இப்படியான நிலைமைக்கு நாம் இடமளிக்க முடியாது. சட்டம் தன் கடமையைச் செய்யும்.அதன்பிடியிலிருந்து எவரும் தப்ப முடியாது.' - என்றார் ஜனாதிபதி.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் அறிவிப்பின்படி, கொழும்பு, தெஹிவளை, கல்கிஸ்சை, கோட்டே, கடுவலைநகரசபைபகுதிகள், மஹரகம, பொரலஸ்கமுவ, கொலன்னாவ பிரதேச சபை பகுதிகள், கொட்டிகாவத்தை, முல்லேரியா பிரதேச சபை பகுதிகள், இரத்மலானை மற்றும் கட்டுப்பெத்த ஆகிய பிரதேசங்களில் நீர் விநியோகம் தடைப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவித்துள்ளதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாகபயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகி றது. இலங்கையின் முக்கிய பிரச்சினைகளில் அதற்கு ஆதரவாகவே சீனா நிற்கிறது.

இலங்கையின் இறையாண்மைசுதந்திரம்மற்றும் கௌரவத்தை பாதுகாப்பதில் சீனா உறுதியாகவுள்ளது. இலங்கையுடன் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த சீனா தயாராக உள்ளது.

இலங்கையின் சுயாதீன அபிவிருத்திக்கான திறனை மேம்படுத்தவும், வறுமைப் பொறி மற்றும் வளர்ச்சியற்ற பொறி ஆகியவற்றை அகற்றவும், அதன் தொழில்மயமாக்கல் செயல்முறை மற்றும் விவசாய நவீனமயமாக்கலை துரிதப்படுத்தவும் சீனா உதவிகளை வழங்கவுள்ளது.

இலங்கை தனது தற்காலிக சிரமங்களை கடந்து, அதன் அபிவிருத்தி நிலைமைகளுக்குஏற்பஉரிய பாதையைக் கண்டறியும். சீனா-தெற்காசிய கண்காட்சியில் இலங்கை ஒரு முக்கியமான பங்கேற்பாளர் மற்றும் பயனாளி என்பதோடு சீனசந்தையை நன்கு பயன்படுத்திக் கொள்ள இலங்கை தரப்பை வரவேற்கின்றேன் - என்றார்.

இதேவேளை, இலங்கையின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் பிராந்தியஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் சீனாவின் உறுதியான ஆதரவிற்கும், கடினமான காலங்களில் இலங்கைக்குசரியானநேரத்தில் மற்றும் பயனுள்ள உதவிகளை வழங்கியமைக்காக பிரதமர் தினேஷ் குணவர்த்தன இதன் போது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டைதுறைமுகம்போன்ற இரு தரப்புக்கும் இடையிலான முன்னோக்கிய முதன்மையான ஒத்துழைப்பு திட்டங்கள் இலங்கை மக்களுக்கு நன்மைகளை கொண்டுவருவதுடன் பிராந்திய இணைப்பு மற்றும் நிலையான அபிவிருத்தியில் முக்கிய பங்கை வகிக் கும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீடு, விவசாயம், சுற்றுலா, எரிசக்தி மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில்ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்குஇலங்கை சீனாவுடன் இணைந்து உணவு தன்னிறைவை அடைவதற்கும் முக்கிய கைத்தொழில்களின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும் உதவும் என்று அவர் மேலும் கூறினார்.

## ஹிந்தி,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்கால உலகுக்கு ஏற்றவர்களாக மாணவர்கள் மாறுவதற்கு இலங்கையின் கல்வியானது தீவிரமாக மாற்றமடைய வேண்டும்.

அதற்காக புதிய பாடங்களை நாம் அறிமுகப்படுத்த வேண்டும். மாறி வரும் உலகிற்கேற்ப எமது மாணவர்கள் ஆங்கிலத்துடன் சேர்த்து ஹிந்தி மற்றும் சீன மொழிகளையும்கற்கவேண்டும்" என அவர் தெரிவித்தார்.

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்துருப்பது எதிர்காலத்தில் இலங்கை இந்தியா மற்றும் சீனாவின் ஆதிக்கத்திற்குள் செல்லும் என்பதற்கான அறிகுறி என்கிறார்கள் விமர்சகர்கள்.

இதேநேரம் சீனாவின் ஆதிக்கம்மேலோங்கும் என்பதனை வெளிப்படையாக கூறினால் இந்தியாவின் அழுத்தம் அதிகரிக்கும் என்பதனால் இந்தியாவையும் சமாளிக்கும் நோக்கில் சீன மொழி மட்டுமன்றி ஹிந்தியினையும் கற்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார் என்றும் சில விமர்சகர்கள் கருதுகின்றனர்.

## கர்ப்பப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால்வைத்தியசாலையை அடைவதற்கு முன்பே அவர் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவ சோதனையில் தெரிவிக்கப்பட்டது.

உடற்கூற்று பரிசோதனையின் பின்னர், கர்ப்பப்பை குழாயினுள், கரு தங்கியமையால்அதுவெடித்து இறப்பு சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

## நீர்நிலையினுள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெய்வன்மைப் போட்டி இடம்பெற்றபோது மைதானத்தின் அருகில்காணப்பட்ட நீர்நிலையில் இரு மாணவர்கள் தவறுதலாக விழுந்துள்ளனர்.

மாணவர்கள் விழுந்ததை அவதானித்தவர்கள் கடமையில் இருந்த ஆசிரியருக்குதெரியப்படுத்தியதையடுத்து, பூவரசங்குளம் பொலிஸார், விசேட அதிரடி படையினர்அவ்விடத்திற்குஅழைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள், ஊர் மக்கள் ஆகியோருடன் இணைந்து இரு மாணவர்களும் தண்ணீரில் இருந்து வெளியே எடுக்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டனர்.

அவர்கள் வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்படுவதற்கு முன்பே இறந்துள்ளார்கள் என வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர். மாணவர்கள் உயிரிழந்தமை பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலும்அங்குகூடியிருந்த ஊரவர்கள் மத்தியிலும் கொந்தளிப்பை உருவாக்கியது. பாதுகாப்பற்ற இடத்தில் போட்டிகளைநடத்தஅனுமதித்தாகஅவர்கள்பல்கலைக்கழக நிர்வாகத்தினர் மீது குற்றஞ்சாட்டினர்.

சம்பவத்தை அறிந்ததும் அந்த இடத்திற்குச் சென்ற வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் மீது ஆத்திரமடைந்திருந்தசிலர்தாக்குதல் நடத்த முற்பட்டனர். அங்கு பல்கலைகழக மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் குவிந்திருத்தமையால்பதற்ற நிலை ஏற்பட்டது.

பல்கலைகழக மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் துணைவேந்தரை பாதுகாப்பாக பல்கலைகழகத்திற்கு அழைந்து சென்றதுடன், பூவரசங்குளம் பொலிஸாரின் பாதுகாப்புடன் அவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். (100)

# குருந்தூர்மலை பொங்கல் நிகழ்வை நிறுத்துவதற்கு தேரர்கள் தீர்மானம்

## மீஹா ஜந்துர சிறிவிமல தேரர் தெரிவிப்பு

குருந்தூர் மலையில் இன்று நடைபெறவிருக்கும் பொங்கல் நிகழ்வை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக மீஹா ஜந்துர சிறிவிமல தேரர் தெரிவித்துள்ளார்.

சிவசேனை உள்ளிட்ட இந்து பௌத்த மத அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்திலுள்ள எமது மத தலைவர்கள் அவைரும் ஒன்றிணைந்து ஒரு நிலைப்பாட்டுக்கு வந்தோம்.

குருந்தூர் மலை பிரச்சினை போன்று ஏனைய விகாரைகளில் உள்ள பிரச்சினைகளுக்கும் அமைப்பு என்ற ரீதியில் ஒன்றிணைந்து சில சிக்கல்களுக்கும் சர்ச்சைகளுக்கும் நாங்களே முன்வந்து பதிலளிக்கவும் குருந்துர் மலையில் பௌத்த விகாரை போன்று இந்து ஆலயம் ஒன்றை அமைத்து இந்து பௌத்த மக்களிடையே இருக்கும் ஒற்றுமையை உறுதிசெய்வதற்கும் தீர்மானித்துள்ளோம்.

இந்த இந்து பௌத்த அமைப்பின் ஊடாக எடுத்ததீர்மானங்களுக்குஅமைவாகநாங்கள் இரு தரப்பினரும் எடுத்த தீர்மானங்களுக்கு அமைவாகச் செயற்படுவோம்.

அதேபோன்று இன்று நடத்தவிருக்கும் பொங்கல் நிகழ்வுகள் போன்ற நிகழ்வுகளை குருந்தூர் மலையில் நடத்த வேண்டாம் என நாங்கள் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

நடைபெறவிருக்கும் பொங்கல் நிகழ்வு மற்றும்எதிர்காலத்தில்நடத்ததிட்டமிட்டிருக்கும் பௌத்த நிகழ்வுகளையும் நிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

குருந்தூர் மலையில் இந்துக்கள் இந்து ஆலயத்திலும் பௌத்தர்கள் பௌத்த விகாரையிலும் வழிபாடுகளில் ஈடுபடும் வகையில் கட்டமைப்புகளை அமைக்கத் தீர்மானித்துள்ளோம்.

சிலபயங்கரவாதபிரிவினருடன்இணைந்து சிக்கல்களை ஏற்படுத்திக்கொள்ளாமல் இலங்கையர்கள் என்ற ரீதியில் நாங்கள் ஒற்றுமையாக செயற்படுவோம் என்று வடக்கிலுள்ளதமிழ்சிங்களமக்களிடமும்இந்து மததலைவர்களிடமும்கேட்டுகொள்கின்றேன். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் மக்களின் இருப்பை நிலைநாட்ட அனைவரும் குருந்தூர்மலைக்கு வருக

## முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு




பொங்கல் நிகழ்வை சிறப்பிக்கவும், தமிழ் மக்களின் இருப்பை நிலைநாட்டவும் குருந்தூர்மலைக்கு இன்று(வெள்ளிக்கிழமை) அணிதிரண்டு வருமாறு கரைதுறைப்பற்று முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குருந்தூர் மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தில் இன்று இடம்பெறவுள்ள பொங்கல் நிகழ்வு தொடர்பில் முல்லைத்தீவு ஊடகஅமையத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

வரலாற்று சிறப்பு மிக்க வன்னி பெருநிலப்பரப்பிலே தொன்மை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தினுடைய பொங்கல் நிகழ்வு இன்று பிரமாண்டமான முறையிலே இடம்பெறவுள்ளது.

கடந்த சில காலங்களாக முரண்பாடுகள் காரணமாக பொங்கல் நிகழ்வை குழப்பியிருந்தார்கள். இருப்பினும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரகாரம் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே ஆலயத்தினுடைய பொங்கல் நிகழ்வை எவ்வித இடையூறும் இல்லாது நடத்துவதற்கு நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

இந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய இருப்பையும் , தொன்மையையும், பாரம்பரிய வழிபாட்டு முறையான பொங்கல் நிகழ்வை நடத்துவதற்கு ஆலய பரிபாலனசபையினர் தீர்மானித்திருக்கின்றார்கள்.

எனவே, தாயக பிரதேசத்திலே வாழுகின்ற அனைத்து தமிழ் உறவுகளும் அதாவது வன்னி பெருநிலப்பரப்பிற்கு அப்பால் வடக்கு கிழக்கிற்கிலே வாழுகின்ற தமிழ் மக்கள் அனைவரும் வருகை தந்து பொங்கல் நிகழ்வை சிறப்பிக்கவும் தமிழ் மக்களின் இருப்பை நிலைநாட்டவும் அனைவரையும் வருகைதருமாறும் அழைத்து நிற்கின்றோம் எனத் தெரிவித்தார்.(05)

# மந்தை காடுகளை உடன் விடுவிக்குக!

## திலீபன் எம்.பி. கோரிக்கை



'மக்களால் பயன்படுத்தப்பட்டு மந்தை காடுகளாக உள்ள இடங்களை உடனடியாக விடுவிக்க வேண்டும்' என்ற கருத்தை முன்வைத்திருக்கின்றோம் என வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களின் காணி பிரச்சினைகள் தொடர்பில் விஷேட கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றிருந்தது. இக் கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவள திணைக்களத்திற்கு சொந்தமான அதாவது மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது தொடர்பான கூட்டம் புதன்கிழமை இடம்பெற்றிருந்தது.

இதில் ஓரளவு திருப்தியாக உள்ளது. ஓரளவெனில் 35 வீதமே என்னால் திருப்தி கொள்ள முடியும். காரணம் ஜனாதிபதியின் இந்த திட்டமானது 1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வனவள திணைக்களம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான குறித்த திட்டம் கிராம மக்கள் வரை சென்றடையவில்லை. கூகிள் வரைபடத்தை வைத்தே இந்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

முப்பதாயிரம், நாற்பதாயிரம் ஏக்கர்கள் விடுவிக்கப்பட்டன எனகூறப்படுகின்ற அந்த இடங்கள் அனைத்தும் ஏற்கனவே மக்கள் வாழக்கூடிய பகுதி. நாம் கேட்ட விடயம் ஏற்கனவே மக்களால் பயன்படுத்தப்பட்டு மந்தை காடுகளாக உள்ள இடங்களை விடுவிக்க வேண்டும் என்கின்ற கருத்தை முன்வைத்திருக்கின்றோம்.

ஜனாதிபதியிடமும் இந்த விடயங்களை முன்வைத்திருக்கின்றோம். அதேபோல் மத்திய தர வகுப்பு காணி பிரதேச செயலகத்துக்கு சொந்தமான காணி. ஆனால் அந்த மத்திய தர வகுப்பு காணிகளை துப்புரவு செய்கின்ற போது வனவள திணைக்களம் கைது நடவடிக்கையில் ஈடுபடுகின்றது.

அது ஒரு தீர்மானமாக எடுக்கப்பட்டது. மத்திய தர வகுப்பு காணிகள் அனைத்தும் பிரதேச செயலாளருக்கே சொந்தமானவை. அந்த மக்கள் மீண்டும் வந்து கேட்கின்ற போது கையளிக்கப்பட வேண்டும் என்கின்ற விடயம்.

இரண்டு வார காலம் அவகாசம் எடுக்கப்பட்டிருக்கின்றது. மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நாம் முன்வைக்கப்பட வேண்டிய பிரச்சினைகள், அதேபோல் கிராமமட்டங்கள் தோறும் கிராம சேவையாளர் ஊடாக இந்த தரவுகள் திரட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருக் கின்றன. பொறுத்திருந்து பார்ப்போம் எனத் தெரிவித்தார். (05)

# பாலர் பாடசாலை முதல் பாலியல் கல்வித் திட்டம்

*பாலர் பாடசாலை முதல் பதின்மூன்றாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பாலியல் கல்வி வழங்கும் திட்டத்தை அடுத்த மாதம் முதல் தொடங்குவதற்கு நாடாளுமன்றம் முடிவு செய்துள்ளது.*

*இதற்கமைய பாடத்திட்டத்தைத் தயாரிப்பதற்கான முன்னேற்றம் தொடர்பாக அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படும் என்றும், அந்த முன்னேற்றத்தின் அடிப்படையில் திட்டத்தை தொடங்குவதற்கான குறிப்பிட்ட திகதி தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)*

# காணிகள் திட்டமிட்டு அபகரிக்கும் நிலையில் முல்லைத்தீவில் விடுவிப்பு நல்ல விடயமேயாம்

## பாராட்டுகிறார் செல்வம் எம்.பி.



அண்மைக்காலமாக தமிழ் மக்களின் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு வரும் நிலையில் விடுவிப்பு என்பது நல்ல விடயமாகப் பார்க்கக் கூடியதாக உள்ளது எனவும், இதனை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் தமிழ் மக்களின் காணி பிரச்சினை தொடர்பில் இடபெற்ற விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்றுமுல்லைத்தீவிலே காணி விடுவிப்பு சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதத்தின் முடிவிலே இடம்பெறும்பிரச்சினைகளை அனுப்ப வேண்டிய தேவை இருக்கின்றபடியால்இன்றைய கூட்டம் இடம்பெற்றிருந்தது.

வனதிணைக்களம் பொறுப்பதிகாரிகள் இங்கே அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்த அடிப்படையில் மாவட்ட செயலகம் கொடுத்த பல இடங்களில் தற்போது சில இடங்கள் விடுவிக்கின்ற முடிவை எட்டியிருக்கின்றன.


அதேபோல் விடுவிக்கப்பட வேண்டிய காணிகளாக இருந்தாலும் இங்கு இருக்கின்ற அதிகாரிகளால் இயலாத ஒரு நிலை ஏற்படுகின்ற போது அதனை நடுவர் குழுவிற்கு அனுப்புவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எங்களைப் பொறுத்த மட்டில் இந்த விடயங்கள் நடைமுறைக்கு வர வேண்டும் என்பதனை பெரிதாக எதிர்பார்க்கின்றோம். ஏனென்றால் இது மக்களுடைய காணிகள் ஏற்கனவே திட்டமிட்டு அபகரிக்கின்ற நிலைகள் இருந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே விடுவிப்பு என்பது உண்மையிலே நல்ல விடயமாக பார்க்க கூடியதாக இருக்கின்றது. இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

கூட்டம் போட்டு பேசி முடிவுகளை எடுத்ததன் பின் மீண்டும் அந்த மக்கள் அங்கே செல்கின்ற போது கைதுசெய்து நீதிமன்றத்துக்கு அனுப்புகின்ற செயற்பாடுகள் இருக்கக்கூடாது என்பது எங்களுடைய எண்ணமாக இருக்கின்றது.

அந்தவகையிலே, எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உடனடியாக நடைமு-றைப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயத்தை நாங்கள் கோரியிருக்கின்றோம். பல விடயங்களை ஆராய்ந்து உடனுக்குடன் தீர்வுகளை கண்டிருக்கின்றோம். அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரி வித்தார். (05)

# மேர்வின் சில்வாவை கைதுசெய்யுங்கள்! வட்டுக்கோட்டை பொலிஸில் முறைப்பாடு



மேர்வின் சில்வாவின் கருத்திற்கு எதிராகவும் அவரை கைதுசெய்ய வேண்டும் எனவும் கூறி ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை மற்றும் ஊர்காவற்துறை தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம் புதன்கிழமை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். "இது சிங்கள பௌத்த நாடு. நான் வடக்கு, கிழக் கிற்கு வருவேன். நீங்கள் விகாரைகளை தடுக்க முயன்றால், மகா சங்கத்தினரை எதிர்த்தால் நான் உங்கள் தலைகளை எடுத்துக் கொண்டு களனிக்கு வருவேன் 'என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் தெரிவித்திருந்த கருத்து பெரும்சர்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# போலி சாரதி அனுமதி பத்திரம் பெற்றவர் குடாநாட்டில் கைது

ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து போலி சாரதி அனுமதி பத்திரம் பெற்றுக்கொண்ட நபர் ஒருவர் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரால், கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, மயிலிட்டி பகுதியை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்-யப்பட்டுள்ளார். குறித்த நபர் பார்வை குறைபாட்டால் பாதிக்கப்பட்ட நிலையில், முகவர் ஒருவர் ஊடாக ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து போலி சாரதி அனுமதி பத்திரத்தை பெற்றுள்ளார். அது தொடர்பில் தகவல் அறிந்த புலனாய்வு பிரிவினர் அவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் கடந்த இரு மாத கால பகுதியில் போலி சாரதி அனுமதிபத்திரம் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுமார் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்ட போக்கு-வரத்து திணைக்களத்திற்கு அருகில்நடமாடும்முகவர்கள், சாரதி அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான பரீட்சையில் சித்தியடைய தவறுவோர், மருத்துவ பரிசோதனையில் சிக்கலை எதிர்கொள்வோர் ஆகியோரை இலக்கு வைத்து அவர்களை நாடிபெருமளவானபணத்தை பெற்றுக்கொண்டு, சாரதி அனுமதி பத்திரத்தை மோட்டார் திணைக்களத்தில் பெற்று தவறுவதாக கூறி, போலி சாரதி அனுமதி பத்திரங்களை வழங்கி வருகின்றனர். இதுதொடர்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் சுமார் 2 மாத கால மாகதொடர்விசாரணைகளை முன்னெடுத்து, போலி சாரதி அனுமதி பத்திரங்களை வைத்திருப்போரைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்என்பது குறிப்பிடத்தக்கது. (05)



# பாதுகாப்புத் தரப்புகளை நவீனமயப்படுத்த முடிவு

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு





புதிய சவால்களுக்கு முகம்கொடுக்க தகுந்த வகையில் பாதுகாப்பு தரப்புகளையும்நவீனமயப்படுத்த வேண்டும் என ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும்ஜனாதிபதியின் பணிக்குழாம்பிரதானியுமான சாகலரத்நாயக்கதெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானத்தின் வருடாந்த பராமரிப்பு சேவைகளுக்காக இந்தியாவிற்கு அனுப்பி வைத்தல் மற்றும் அதற்கு மாற்றீடாக கடல்சார் கண்காணிப்பு டோனியர்விமானமொன்றை இலங்கை விமானப்படைக்கு கையளிப்பதற்காக செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் விசேட நிகழ்வொன்று இடம்பெற்றது.

இலங்கை அரசாங்கத்தின்கோரிக்கைக்குஇணங்க, இந்திய கடற்படையின் டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானம், 2022 ஓகஸ்ட் 15 ஆம் திகதி இரண்டு வருட காலத்துக்கு இலங்கை விமானப்படையிடம் கையளிக்கப்பட்டது.

மேற்படி கடல்சார் கண்காணிப்பு விமானம் ஒரு வருடம் தொடர் சேவையை முன்னெடுப்பதற்கு சிறந்த பங்களிப்பைவழங்கியிருந்து.

இந்தவிமானம்வருடாந்த பராமரிப்புக்காக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளதோடு, அந்த விமானத்துக்கு மாற்றீடாக மற்றுமொரு டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானம் இலங்கைவிமானப்படைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோருடன் இந்திய உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும்ஜனாதிபதியின்பணிக்-குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இலங்கை பொருளாதாரச் சரிவை எதிர்கொண்ட போது இந்தியாவின் நட்புக்கும் அப்பாற்பட்ட சகோதரத்துவத்தை உணர முடிந்ததாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் மேற்கொண்டிருந்த இந்திய விஜயத்தின் பலனாக இருநாடுகளினதும் உறவு மேலும் வலுப்பெற்றுள்ளது என்றும் அதற்கமைய எதிர்காலத்திலும் இருநாடுகளும் நெருங்கிய ஒத்துழைப்புடன் பணியாற்றதீர்மானித்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் கடினமாக நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்த போது, கடல்சார் பணிகளுக்கு அவசியான எரிபொருளை அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் நமது விமானப்படைக்கும் கடற்படைக்கும் வழங்கியிருந்தன என்பதையும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

புதிய தொழில்நுட்பங்களுக்கு அமைய விமானங்களையும் வடிவமைக்க வேண்டிய தேவை இருந்தாலும், எமது பொருளாதாரச் சரிவினால் அதனை செய்ய முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எமது கடல்சார் நடவடிக்கைகளை கண்காணிக்கும் போது, சட்ட விரோத போதைப்பொருள் வியாபாரம்,ஆயுதகடத்தல்மற்றும் ஆள்கடத்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் முக்கியமானதாக காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய சவால்களுக்கு முகம்கொடுக்க தகுந்த வகையில் பாதுகாப்பு தரப்புகளையும் நவீனமயப்படுத்தவேண்டும்என்றும் அந்த நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டம் ஜனாதிபதியால் தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## குருந்தூரின் அமைதி எப்படி சாத்தியம்?

குருந்தூர்மலை மீண்டும் கொதிநிலை அடைந்திருக்கிறது. இன்று அங்கு பொங்கலிட வருமாறு தமிழர் தரப்பினர் அறிவித்துள்ளனர். அதேவேளை அதனைத் தடுத்து நிறுத்த வருமாறு சிங்களக் கடும்போக்குவாதிகளும் அறிவித்துள்ளனர்.

இதற்கான தீர்வாக யாழ்ப்பாணத்தில் கூடிய சில பௌத்த மற்றும் இந்து அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் குருந்தூர்மலையில் சைவ ஆலயம் ஒன்றும் அமைக்கப்படும் என்றும், இன்றைய பொங்கல் நிகழ்வு தேவையற்றது என்றும் திடீரென முடிவெடுத்துள்ளது. குருந்தூர் ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தின் நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் குருந்திமலை விகாராதிபதி கலந்துகொண்டிருக்கிறார். சிவசேனை என்கிற அமைப்பும் இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்டிருக்கிறது. இது குருந்தூர்மலைச் சிவன் கோயிலுடன் எந்தவிதத்திலும் நேரடியாகத் தொடர்புகளைக் கொண்டிருக்காத அமைப்பு.

இப்படி குருந்தூர்மலை மற்றும் அதனை அண்டிய பகுதி மக்களின் பங்களிப்பின்றி இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய தீர்மானம் – அதாவது விகாரை அமைக்கப்பட்டது போன்றே குருந்தூரில் இந்து ஆலயம் ஒன்றையும் அமைப்பது – குருந்தூரின் இன்றைய பதற்றத்தைத் தணிப்பதற்குப் போதுமானதாக இருக்கவில்லை என்பது கண்கூடு. பதிலுக்கு குருந்தூரோடு தொடர்புபடாத ஏதோவொரு சிறு இந்து அமைப்பு இத்தகைய முடிவுக்கு எப்படி இணங்க முடியும் என்கிற கோபத்தையும் சீண்டலையும்தான் காணமுடிகிறது. எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் நேரடியாகப் பேசி எடுக்காத எந்தவொரு முடிவும் இந்த விடயத்தில் பயன்தரப்போவதில்லை.

அதேநேரம் இந்த விடயத்தை ஒரு பதற்றத்தை நோக்கி, இன முறுகலை நோக்கி, மதச் சண்டையை நோக்கி வளர்த்தெடுத்துச் செல்வதிலும் பயனேதும் இல்லை.

தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடுவதற்கு முன்னர் இருந்த பௌத்த சிங்கள மயமாக்கல் நிகழ்ச்சி நிரலை போருக்குப் பின்னரும் தொடர்வதே இந்தப் பிரச்சினையின் அடிநாதம். இந்த நாட்டில் சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்பதை எடுத்தெறிந்து, பிக்குகள் அத்துமீறமுடியும் – அவர்களுக்குத் தனியான முன்னுரிமை இருக்கின்றது என்கிற வகையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளும் அதற்கு அரச ஆதரவும் அனுக்கிரகமும் கிடைப்பதுமே இங்கு பிரச்சினை. குருந்தூர் மலையாக இருந்தாலும் வலி. வடக்கு தையிட்டியாக இருந்தாலும் சட்டத்திற்குப் புறம்பாக விகாரைகளை அமைத்துவிட்டு, அவை அமைக்கப்பட்டாயிற்று இனி அவற்றை அகற்ற முடியாது அதனால் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவோம் என்று கூறுவது அத்துமீறல் மட்டுமல்ல நாட்டின் அரசமைப்பையும் சட்டத்தையுமே கேலிக்கூத்தாகும் செயல்.

குருந்தூர்மலையில் இந்து ஆலயம் அமைப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது என்பதும் அவ்வாறானதே. அங்கு சட்டத்துக்குப் புறம்பாக பிக்குவும் சிங்களவர்களும் செயற்பட்டார்கள் என்பது வெளிப்படை. நீதிமன்றக் கட்டளையை மீறி அங்கு ஒரு விகாரை அமைக்கப்பட்டிருக்கின்றது. அது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றது. பிரச்சினை மதம் சார்ந்தது மட்டுமல்ல, சட்டமீறல் மற்றும் நீதித்துறை சார்ந்ததும்கூட. அப்படியிருக்கும்போது தொல்லியல் இடமான குருந்தூரில் மீண்டும் ஒரு இந்து ஆலயத்தை கட்ட அனுமதியளிப்பதாக பிக்கு ஒருவர் சொல்வது சட்டத்தையும் அரசமைப்பையும் முற்றிலும் மதிக்காத பௌத்த மேலாதிக்கவாதத்தின் வெளிப்பாடு.

எதற்கெதிராக மக்கள் போராடுகிறார்களோ அதனையே அவர்களுக்கான தீர்வாக முன்வைப்பது என்பது கேலிக்குரியது. எனவே இதுபோன்ற சில்லறைத்தனங்களை விடுத்து பிக்குகள் சட்டத்தை மதித்து, நீதிமன்றத்தை மதித்து, பௌத்த மேலாதிக்கவாதத்தைக் கைவிட்டு ஒரு இணக்கப்பாட்டுக்குவருவதே இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக வரமுடியும். அதுவே பதற்றத்தைத் தணிப்பதற்கான வழிவகையாகவும் இருக்கமுடியும்.

குருந்தூரில் பதற்றத்தைத் தணிப்பதற்கு மட்டுமல்ல வடக்கு கிழக்கு முழுவதும் பௌத்தத்தால் ஏற்படும் பதற்றத் தைத் தணிப்பதற்கு, பௌத்தம் தனது ஆக்கிரமிப்பு மனநிலையைக் கைவிடுவதே முக்கியமான தீர்வு. பௌத்தத் துடன் பேசும் இந்து அமைப்புக்கள் இந்த விடயத்தைத்தான் வலியுறுத்தவேண்டுமே தவிர சட்டத்துக்குப் புறம்பாக குருந்தூரில் ஆலயமும் அமைப்போம் போன்ற தீர்வுகளையல்ல.

# தமிழ் பூதம்

**என் சத்திய மூர்த்தி**



2006ஆம் ஆண்டு மறைவது வரை, தமிழ் திரைபட நடிகர் ஆர்.எஸ்.மனோகர், புராண-சரித்திர நாடகங்களை அரங்கேற்றுவதில் நிகரில்லாமல் இருந்தார். சிறந்த பக்திமானான மனோகரை, அவர் சென்னையில் இருந்தால், காலை நேரங்களில் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் நிச்சயமாக காணலாம். சிவாஜி-எம்.ஜி.ஆர் திரைபடங்களில் வில்லனாகப் பரிணமித்தாலும், திரைப்பட நடிகருக்கு உண்டான எந்த பந்தாவும் இல்லாமல் அவரைக் கோவிலில் பார்க்கலாம். அதே சமயம், தனது இறைபக்தியை தம்பட்டம் அடித்துக்கொண்டவர் அல்லர், அவர்.

மனோகர் இறந்த பின்னும் 'நாடக காவலன்' என்ற பட்டம் அவரது பெயரோடு ஒட்டிக்கொண்டது. காரணம், பிற நடிகர்கள் பொதுவாக சமூக நாடகங்களை மட்டுமே அரங்கேற்றி வந்த எழுபதுகளிலும் எண்பதுகளிலும், அவர் மட்டுமே சரித்திர-புராண நாடகங்களை அரங்கேற்றி வந்தார். பின்னர், சமூக நாடகங்களின் இடத்தை, கிரேசி மோகன், எஸ்.வி.சேகர் போன்றோரின் வெடிசிரிப்பு நாடங்கள் பிடித்துக்கொண்டபோதும், மனோகரின் நாடகங்கள் நிலைத்து நின்றன. வயது முதிர்ச்சி காரணமாக அவர் தனது நாடகங்களை நிறுத்திக் கொள்வது வரை, அவரை 'சேலஞ்ச்' செய்ய யாரும் இருக்கவில்லை.

மனோகரின் நாடகங்களில் முக்கியமான இருவிடயங்கள் குறிப்பிடதக்கவை. ஒன்று, காட்சி அமைப்பில் பிரம்மாண்டம். இந்திய நாடக உலகில் அவர் புகுத்திய 3டி தந்திர காட்சிகளை இன்றுவரை வேறு யாரும் முயற்சிக்கவில்லை. அவ்வாறு அவர்களால் செய்யமுடியவில்லை.

மனோகரின் முந்தைய தலைமுறையில், 'நவாப்' ராஜமாணிக்கம், நாடகமேடையில், யானை, குதிரை, ரதம் ஆகியவற்றை உள்ளடக்கிய நகர்வல காட்சிகளை கூட தத்ரூபமாக, நிஜ விலங்குகளை கொண்டு வடிவமைத்தார். என்ன, அவர் கோலோச்சிய நாற்பதுகளில், பெண்கள் நாடகங்களில் நடிப்பதில்லை. எனவே, ஆண்களே பெண் வேடத்திலும் நடித்தார்கள்.

மற்ற நாடகங்களில் மேடை ஐம்பது அல்லது அறுபது அடி அகலம் என்றால், மனோகரின் நாடகத்திற்கு, மேடை நூறு அடி அகலம் இருக்கும். குறிப்பிட்ட காட்சியில் ஒரு பெரிய நாகபாம்பு கதையின் நாயகனை கொத்த வருகிறது என்றால், அந்த மேடை முழுவதையும் ஆக்கிரமித்துக்கொண்டு, ஒரு ஐந்து தலை அல்லது நூறு தலை பாம்பு, அமைதியாக நாடகம் பார்கத்துக்கொண்டிருக்கும்; பார்வை-யாளர்களை நோக்கி பாய்வது போன்ற காட்சி அமைப்புகள், அரங்கத்தையே அதிரவைக்கும். இது வெறும் 'சாம்பிள்' தான்.

### எதிர்மறை நாயகன்

மனோகரின் புராண நாடகங்களின் மற்றொரு சிறப்பு, அவரது கதை தேர்வு, அல்லது கதை நாயகனின் தேர்வு. அந்த வேடங்களை அவரேதான் பெரும்பாலும் ஏற்று நடிப்பார். ஆனால், அந்த கதாபாத்திரத்தின் முக்கியத்துவம் என்னவென்றால், அவை அனைத்துமே, புராணங்கள் வில்லனாக சித்தரிக்கும் பாத்திரங்களை, நல்லவர்களாக அவர் காட்டியிருப்பது தான். அதாவது, அந்த 'கெட்ட மனிதர்களின்' நல்ல பக்கத்தை நாடமாக்கி இருப்பார்.

இராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், கந்த புராணம் ஆகிய புராணங்களில் கெட்டவன் என்று கூறப்படும் பாத்திரங்களின் பார்வையில் தனது நாடககதையை அமைத்திருப்பார். இப்படித்தான், சுக்கிராச்சரியார், நரகாசுரன், சூரபத்மன், சிசுபாலன், சாணக்கிய சபதம் போன்ற புராணங்களில் தோன்றும் எதிர்மறை நாயகர்களை கதாநாயகனாக்கி தனது நாடகங்களை அரங்கேற்றி பெருவெற்றி பெற்றார்.

மனோகரின் மறக்கமுடியாத அந்த லிஸ்டில், இலங்கைக்கு ஒன்றல்ல, இரண்டு இடங்கள் இருந்தன. இராவணேஸ்வரன், இந்திரஜித் என்று இராமாயணத்தில் தோன்றும் தந்தை-மகன் ஆகிய இருவரையும் கதையின் நாயகனாக மாற்றி, இரண்டு பெரும் நாடகங்களை மனோகர் அரங்கேற்றினார்.

### தனி நபர் மசோதா

இவ்வளவு பீடிகைக்கும் காரணம், அண்மையில் இலங்கை நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட தனி நபர் பிரேரணை மீதான விவாதம்தான். ஐக்கிய மக்கள் கட்சியின் புத்திக பதிரன ஒரு தனி நபர் பிரேரணையை முன்வைத்தார். இந்தியாவில் இராமாயணத்தில் பங்கு பெறும் இலங்கை அரசனான இராவணனின் சரித்திரத்தை முறைப்படி ஆய்வு செய்ய அரசு முன்னெடுப்புகளை செய்யவேண்டும் என்பதே அவரது கோரிக்கை.

இராவணன் இந்த நாட்டின் அரசனாக இருந்தான் என்பது பொதுவான கருத்து என்றாலும், அது குறித்து சரித்திர குறிப்புகள் எதுவுமே கிடைக்கவில்லை. இதில் உறுப்பினர் பத்திரன சொல்லாமல் விட்டது, சிங்கள-பௌத்தர்கள், இந்த நாட்டின் சரித்திரத்தின் மூல நூல் என்று பறைசாற்றும் மஹாவம்சம் போன்ற தொகுப்புகளிலும் இராவணன் குறித்து எந்த குறிப்பும் இல்லை.

கடந்த ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மஹாவ-ம்சத்தில் இராவணனின் காலகட்ட சரித்திரத்தை வேண்டுமென்றே இரட்டடிப்பு செய்தார்களா, அல்லது, அவர்களது காலகட்டத்திலும் இலங்கேஸ்வரன் குறித்து குறிப்புகளோ, செவிவழி செய்திகளோ இருக்கவில்லையா, என்பது தனிப்பட்ட கேள்வி. இராவணன் குறித்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே, இந்த கேள்விக்கான விடை கிடைக்கும். அல்லது அந்த ஆராய்ச்சிக்கான முதல் கேள்வியே, இது குறித்தாக இருக்கும்.

இத்தகைய ஆய்வின் மூலம், நாட்டின் சரித்திரத்தில் இன்றுவரை அறியப்படாத காலகட்டத்தின் நிகழ்வுகள் குறித்து தெளிவு பிறக்கலாம், என்பது நாடாளுமன்ற உறுப்பினர் பத்திரனவின் கருத்து. அது மட்டுமல்ல. இராவணனின் அறிவுத்திறன் குறித்து அறிய முடிந்தால், அதன் மூலம் நாட்டின் சமகால பிரச்சினைகளுக்கு முடிவு காணலாம் என்பதும் அவரது எண்ணம். இதில், இரண்டாவது கருத்து எந்த அளவிற்கு சாத்தியமானது என்பது தெரியவில்லை. என்றாலும், பத்திரனவின் முதல் கோரிக்கையில் சிறிதளவாயினும் அர்த்தம் இருக்கிறது.

### வேலையற்ற வேலை

பத்திரனவின் இந்த முயற்சி குறித்து இரண்டு கருத்துகள் இருக்கலாம். ஒன்று, அவர் கோரும் இராவணன் குறித்த ஆய்வின் மூலம் இலங்கையின் சரித்திரம் குறித்து புதிய உண்மைகள் வெளிவரலாம். இதிகாச-புராண காலத்தை வைத்துக் கணக்கிடும்போது, மஹாவம்ச குறிப்புகள் பிறகாலத்தியவே என்ற கருத்தும் உருப்பெறலாம்.

அதன் மூலம், இந்த நாட்டில் தமிழர்கள் மூதாதை சமூகமா, அல்லது, சில பேரினவாதிகள் கூறுவது போல், பிற்கால 'வந்தேறிகளா', என்பதும் அவர்களுக்கே புரியவரும். இந்த ஒரு காரணத்திற்காகவே, அவர்கள் பத்திரனவின் முயற்சியை முளையிலேயே கிள்ளியெறியும் வாய்ப்பே அதிகமாக உள்ளது.

இதற்காக, அவர்கள் வழமையாக கூறும் காரணம் ஒன்றையே மீண்டும் அவிழ்த்து விடுவார்கள். மஹாவம்சத்தின் கூற்றிற்கு சவால் விடும் என்ற முயற்சியையும் முன்னெடுக்க கூடாது என்று அவர்கள் நிர்பந்திக்கலாம். இராவணன் சரித்திரம் இந்திய புராணத்தின் கட்டுகதை, அது குறித்து ஆய்வு செய்வது, வேலையற்ற வேலை என்றுகூட அவர்கள் பரப்புரை செய்யலாம். இது போன்ற கருத்தை சில அறிவுஜீவிகள்கூட முன்வைக்கலாம்.

### முதல் விமான ஓட்டி

இவ்வாறு யாராவது விதண்டாவாதம் செய்தால், அவர்கள் அறிய வேண்டிய விடயம் ஒன்று உள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டு, இராவணனே உலகின் முதல் வான ஊர்த்தியை கண்டுபிடித்தான் என்று இலங்கை அரசே கூறியுள்ளது. அதனை நிரூபிக்கும் வண்ணம் ஆய்வு செய்ய, அரசு, நிதி ஒதுக்கீடும் செய்தது. அந்த ஆய்வின் முடிவுகள் இன்னமும் தெரியவில்லை.

என்ன, இராவணன் இலங்கை அரசன் என்பதால், இராமயணத்தில் கூறப்பட்டுள்ளது போல், அவன் சீதையை சிறைபிடித்தான் என்பதை மட்டும், அந்த ஆராய்சி குறித்து தலைநகர் கொழும்பை அடுத்த காட்டுநாயக்கவில் நடந்த விஞ்ஞான கருத்தரங்கில் கலந்துகொண்ட, சிங்கள-பௌத்த புத்திஜீவிகள் யாரும் குறிப்பிடவில்லை. ஆமாம், இராவணனே உலகின் முதல் வான ஊர்த்தியின் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்தவன் என்றும், அவனே உலகின் முதல் விமான ஓட்டி என்றும் நிரூபிப்பதற்காக அரசு செலவில், விமானபடையை மையப்படுத்தி, இரண்டு நாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது என்பதே உண்மை.

அதாவது, அப்போது இராவணனின் வான ஊர்த்தி திறன் குறித்து ஆராய்ச்சி செய்வதை ஆதரித்தவர்கள், அவனது காலத்திய சமூக-பொருளாதார சரித்திரம் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப் படுவதை பொதுவெளியில் எதிர்க்கமு-டியாது. ஆனால், தடுக்கமுடியும். தங்களது அரசியல் மற்றும் அரச செல்வாக்கை பயன்படுத்தி, அந்தப் புதிய ஆய்வு மட்டும் முன்னெடுக்கப்படாமல் பார்த்துக்கொள்ளலாம்.

### சுற்றுலா தலங்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் பத்திரன சுட்டிக்காட்டியது போல், இராவணன் சரித்திரத்தை உள்ளடக்கிய இலங்கையில் இருபத்தியோரு சுற்றுலா தலங்கள் உள்ளன. அவற்றை, இந்திய சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் மாற்ற, அவர் கூறியது போலான ஆராய்ச்சி மேலும் உதவலாம்.

இந்த இருபத்தியோரு தலங்களில், நுவரெலியாவில் உள்ள சீதை அம்மன் கோவில் முக்கியம் வாய்ந்தது. அது தவிர, மூனீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் மற்றும் இராவணன் குகை போன்றவையும் உள்ளடங்கும்.

இராவணன் குறித்த சரித்திர ஆராய்ச்சி முன்னெடுக்கப்படுமேயானால், அதன் மூலம் இந்த திருதலங்களின் காலகட்டம், மக்களின் மொழி, கலாசாரம் மற்றும் வாழ்க்கை முறை போன்றவை குறித்தும் தெளிவு பிறக்கலாம். இதன் காரணமாகவே, தமிழர்கள், இந்த நாட்டில் சிங்கள-பௌத்தர்கள் காலத்திற்கு முன்னமேயே இருந்திருக்கிறார்கள் என்றும் நிரூபிக்கப்படலாம்.

இதனை சமகால பேரினவாதிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எனவே, அத்தகைய ஒரு ஆய்விற்கு அரசு அங்கீகாரமும், உதவிகளும் இல்லாமல் பார்த்துக்கொள்வார்கள். வேண்டுமென்றால், இராவணனின் வான ஊர்த்தி குறித்த தங்களது ஆய்வுகளையும் கூட நிறுத்திக்கொள்வார்கள்.

### செவிவழி செய்திகள்

இராவண சரித்திரத்தை தோண்டிபார்த்தால், அதிலிருந்து ஒரு தமிழ் பூதம் கிளம்பும் என்று தெரிந்திருந்தால், ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் பத்திரன, அது குறித்த கோரிக்கையை நாடாளுமன்றத்தின் முன் வைத்திருப்பாரா, என்பதும் சந்தேகமே. காரணம், இவ்வாறான ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதில் இராவணன் பண்டைய தமிழனே என்று நிரூபணம் ஆவதற்கு ஒரு சதவீத சாத்தியகூறு இருந்தாலும், தற்போதைய சிங்கள-பௌத்த பேரினவாதிகள், அதற்கு அவரை பழிவாங்க துடிப்பார்கள். அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் அவரது மாத்தறை மாவட்டத்தில், அவரை தோற்கடிக்க முயற்சி மேற்கொள்வார்கள்.

பத்திரனவின் பிரேரணை குறித்த நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்ட தமிழ் உறுப்பினர்கள், இராவணன் தமிழனே என்ற சாரப்படியே விவாதத்தை முன்னெடுத்தார்கள். அவர்களில் குறிப்பாக, தமிழ் அரசு கட்சி உறுப்பினர் சிறீதரன், தமிழர் பகுதிகளில் உள்ள ஐந்து ஈஸ்வரங்களை குறிப்பிட்டு, அவற்றில் சிலவற்றுடனாவது இராவணனின் பெயர் இணைக்கப்பட்டிருந்தது என்று கூறினார். கன்னியா வெந்நீரூற்றையும்கூட இராவணன் காலத்துடன் இணைத்துப் பேசினார். அவ்வாறான செவிவழி செய்திகள் தமிழர் மத்தியில் ஏராளம்.

என்றாலும், சிறீதரனின் நாடாளுமன்ற உரையில் சிறிய பிழை ஒன்று இருந்தது. வடமொழியான சமஸ்கிரத்தில் இராமாயணத்தை முதலில் எழுதிய வால்மீகியின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத யானை முக கடவுள் விநாயகர், எழுத்தாணி உடைந்தபோது. தனது தந்தங்களில் ஒன்றை உடனேயே முறித்து எழுத்தாணியாக பயன்படுத்தினர், என்று அவர் கூறினார்.

ஆனால், புராண கதைகளின்படி, விநாயகர் கொம்பை உடைத்தது, வால்மீகியின் இராமாயணம் சம்மந்தப்பட்ட விடயம் அல்ல. மாறாக, வேத வியாசர் மஹாபாரதத்தை சொல்லச்சொல்ல, விநாயகர் அதனை ஓலைசுவடியில் அதே வேகத்தில் எழுதிய போது நிகழந்தது, என்பதே புராணங்கள் கூறும் விடயம்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# முன்பள்ளிக் கல்வி முறையில் விரைவில் மாற்றம் வருமாம்

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறுகிறார்



சர்வதேச தரத்திற்கு அமைவாக முன்பள்ளிக் கல்வி முறையைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'ஐந்து பிரிவைச் சேர்ந்த முன்பள்ளி மாணவர்கள் தரம் 1 இற்கு வருகிறார்கள். ஒரு முன்பள்ளி பள்ளி அனைத்து செயல்பாடுகளையும் கற்றுத் தருகிறது.

மற்றொரு முன்பள்ளி ஒன்றிலிருந்து 10 வரையான எண்களைக் கற்றுக்கொடுக்கிறது. மற்றொன்று 100 வரை கற்றுக் கொடுக்கிறது.

அவர்கள் அனைவரும் தரம் ஒன்றுக்கே வருகின்றனர். இப்போது ஜப்பானில் இவை அனைத்தையும் கற்பிக்கிறார்கள். அதுதான் உலக தர அமைப்பு.

எனவே, தேசிய கல்வி அல்லது சர்வதேச தரத்திற்கு ஏற்ப இரண்டு வருட முன்பள்ளிக்கான கட்டமைப்பை உருவாக்க வேண்டும். பயிற்சியற்றவர்களுக்கு பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்க வேண்டும்.

பயிற்சி இல்லாத முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் முறையான பயிற்சி அளிக்கப்பட்டு அந்த நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும்.

அவர்கள் முன்பள்ளிக்கு தகுதியானவர்களா என்பதை உறுதி செய்ய வேண்டும். சாதாரண தர பரீட்சையில் தோல்வியடைந்தவர்களும் கிராமங்களில் உள்ள 15 முதல் 20 மாணவர்களை சேர்த்து முன்பள்ளியை ஆரம்பிக்கிறார்கள்.

இதற்காக சிறுவர் விவகார அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம் மற்றும் கல்வியியலாளர்களுடன் அடுத்த வாரம் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளேன். அதிக நேரம் இல்லை. இப்போது நீங்கள் அதை சர்வதேச தரத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். டிப்ளோமா கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன.

நாங்கள் சான்றளிப்பவர்கள் மாத்திரமே முன்பள்ளியைத் தொடங்க முடியும். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# தேரர்களுக்கு விளக்கமளித்தார் ஆளுநர் செந்தில் தொண்டமான்



திருகோணமலை நிலாவெளி இழுப்பை குளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருக்கும் பௌத்த விகாரையின் நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு கோரி பொதுமக்கள் அண்மையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இந்தச் சம்பவத்தால் இனமுறுகல்கள் ஏற்படும் அபாயம் காணப்பட்டதால் குறித்த விகாரையின் நிர்மாணப் பணிகள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நிறுத்தப்பட்டன.

இது தொடர்பாக பல அரசியல்வாதிகள் ஆளுநருக்கு அழுத்தம் கொடுத்த போதிலும் ஆளுநருடைய முடிவில் அவர் உறுதியாக இருந்தார்.

அதேசமயம் இந்த விவகாரத்துடன் தொடர்புடைய விகாராபதிகளைச் சந்தித்து இந்தப் பிரச்சினை தொடர்பாக அவர்களுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் விளக்கமளித்தார்.

குறிப்பாக பலாங்கொட மிரிஷ் வத்த தம்மானந்த பிரிவென விகாரையின் விகாரபதி சங்கநாயக கரவிட்ட உயாங்கொட மைத்திரிமூர்த்தி மஹாநாயக்க தேரர், அம்பருக்காஹரம விகாரை அமரபுற சமாகமே மூலஸ்தானய, அமரபுற மூலவன்சிக பாரவிய மூலஸ்தானய வெளித்தர பலப்பிட்டிய விகாரையின் விகாராதிபதி வணக்கத்துக்குரிய ராஷ்பதி அகுங்கல்லே விமல தம்ம திஸ்ச மஹாநாயக்க மஸ்த்ரவில அமரபுர மூலவன்ச பார்சவய தேரர் ஆகியோரை சந்தித்து, விகாரை அமைப்பதால் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக ஆளுநர் தெளிவுபடுத்தினார்.

இதன்போது நிலாவெளி இலுப்பை குளம் பகுதி மக்களின் ஆதரவுடன் விகாரை அமைக்கப்படாமல், எதிர்ப்புக்கு மத்தியில் விகாரை அமைக் கப்படும் பொழுது அங்கு இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையை ஏற்படுகின்றது. எனவே ஆளுநர் என்ற வகையில் இனமுறுகல் ஏற்படுவதை தவிர்க்கும் முகமாக தன்னுடைய கடமையை செய்துள்ளதாக ஆளுநர் விளக்கம் அளித்தார் .

மேலும் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து இனங்களின் உரிமைகளையும் சமமாகப் பாதுகாக்க வேண்டியது எனது கடமை எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ் மக்கள், வட இந்தியர்கள், தென் கொரியா, தாய்லாந்து, பூட்டான், ஜப்பான், சீனா, நேபால், தாய்வான், இந்தோனேஷியா போன்ற பல நாடுகளில் புத்த பெருமானை வழிபடுகின்றனர். அவருடைய போதனைகளை முழுமையாக பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. இவ்வாறான சூழ்நிலையில் விகாரை அமைக்க கூடாது என எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கும் பொழுது அரசாங்கம் என்ற வகையில் அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது. எனவே இவ்விடயம் தொடர்பாக அனைத்து தரப்பினரும் கலந்துரையாடி சுமுகமான தீர்வு பெற்றுதருவதன் மூலம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை பலப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார். (05)





OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FREEDOM
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்

காலைக்கதிர் Kalaikkathir

# விளையாட்டுத் துறையை மேம்படுத்தல் ஒப்பந்தம்



விளையாட்டுதுறைமேம்படுத்தல் நிகழ்ச்சி திட்டத்துக்கான ஒப்பந்தம் வவுனியா பல்கலைக்கழகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

விளையாட்டுதுறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் சிறந்த விளையாட்டு வீர, வீராங்கனைகளை உருவாக்கும் நோக்கில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது.

குறித்த ஒப்பந்தத்தில் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரி. மங்களேஸ்வரன் மற்றும் குட்வில் நிறுவனத் தின் ஸ்தாபகர் குசல் குனசேகர ஆகியோர் ஒப்பந்தத்தில் கையொப் பமிட்டிருந்தனர்.

இந்நிகழ்வில் பீடாதிபதி கள், பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## வவுனியாவில் வறட்சி 1,120 பேர் பாதிப்பு

வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக வவுனியாமாவட்டத்தில்450 குடும்பங்களைசேர்ந்த1,120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின்உதவிபணிப்பாளர் ஏ.எம்.ரூவான் ரட்நாயக்கா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில்நிலவும் வறட்சிநிலைமைதொடர்பில் ஊடகவியலாளருக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

வறட்சியின்பாதிப்புக்கள் அதிகமாகவவுனியாவடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில் உணரப்பட்டுள்ளது. மேலும், அவர்கள் குடிநீர் இல்லாமல்கஷ்டப்படுவதால் குடிநீர் வழங்க தற்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

## நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் தொடர்ந்தும் குறைவடைகிறது

### நீர்ப்பாசன திணைக்களம் எச்சரிக்கை

வறட்சியான காலநிலை காரணமாகமகாவலிஅதிகார சபைக்கு உட்பட்ட 21 நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் தொடர்ந்தும்குறைவடைந்து வருவதாக பிராந்திய செய்தி யாளர்கள் தெரிவிக்கின் றனர்.

சில நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 50 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மைய நாள்களாக கருத்தாடலுக்குள்ளான சமனலவாவி நீர்த்தேக்கத் தின் நீர் மட்டம் 2.5 வீதமாக குறைந்துள்ளதாகவும் சம னலவாவியில் இருந்து நீரை விநியோகிக்கும் உடவளவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 2.8 வீதமாக உள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. (05)

# அரச திணைக்களங்கள் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துகின்றனவாம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் குமுறுகிறார்



தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மேற்கொள் ளப்படும் செயற்பாடுகளையும், பரிந்துரைகளையும் வரவேற்பதாக ஈ.பி.டி.பி. கட்சியின்செயலாளர்நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின்13 ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தல் தொடர்பில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளிலேயே குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த முன்னெடுப் புக்கள் அர்த்தபூர்வமானவையாக அமைய வேண்டுமாயின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நடைமு- றைப் பிரச்சினைகள் தொடர்பாக விரைவான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளப் பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றின் சில முறையற்ற செயற்பாடுகள் தமிழ் மக் களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் இருக்கின்றன எனக் குறித்த ஆவணத்தில் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், தொல்லியல் ஆய்வு செயற்பாடுகள் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த வரலாற்றுத்துறை நிபு ணர்களின் பங்குபற்றுதல் மற் றும் கலந்தாலோசனைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டுமே தவிர, தொல்லியல் திணைக்களத்தின் கொழும்பு அலு வலகத்தில் இருக்கின்ற உயர் அதி காரிகள் சிலரின் விருப்பு வெறுப்பு சார்ந்த முன்னெடுப்புக்களாக அமைவதை அனுமதிக்கக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறாளை முருகன் ஆலயம், கீரி மலை தீர்த்தக் குளம் மற்றும் பருத்தித்துறை இறங்கு துறை போன்ற பகுதிகளை, தொல்லியல் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தி அண்மையில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பாக குறித்த ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், துறை சார் நிபுணர்கள், சம்பந்தப்பட்ட பிரதேசத்தை தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் போன்ற யாருடைய கருத்துக்களும் உள்வாங் கப்படாமல் கொழும்பு அதிகாரிகளால் வெளியிடப்பட்டுள்ள குறித்த வர்த்தமா னில் உள்ளடக்கப்பட்டுள்ள பறாளை முருகன் ஆலயம் தொடர்பில் முன் வைக்கப்பட்டுள்ள காரணங்கள் தவறானவை என்பதை வரலாற்றுத் துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று, வனவளப் பாது காப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகள் சிலவும், தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கொள்கைரீதியான தீர்மானங்களுக்கு மாறாக வடக்குகிழக்கு பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும், இவ்வாறான விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக் கைகளை மேற்கொள்ளாமல், முன் னெடுக்கப்படுக்கின்ற எவ்வகையான முயற்சிகளும் வெற்றியளிக்காது எனவும் தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்த உதவாது எனவும் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், அரசமைப்பின்13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைநிறைவேற்றமுடியும் என்ற ஈ.பி.டி.பி.கட்சியின் நீண்ட கால நிலைப்பாடு குறித்த ஆவணத்தில் மீண்டும்வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்து- வதற்கு சாத்தியமான 3 கட்டப் பொறிமுறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (05)

## மாதகல் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் 143 ஆவது ஆண்டு விழா





யாழ்ப்பாணம் மாதகல் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் 143 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்று (வியாழக்கிழமை) காலை நடைபவனியும் அதன் பின்னே வாகன பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.

'தாய்மடியாக இருந்து எமக்கு கல் வியூட்டிய பாடசாலை தாயின் பெருமை யினை நாம் எல்லோரும் ஒன்றிணைந்து கொண்டாடி மகிழ்வோம் வாரீர்' எனும் தொனிப்பொருளில் மாதகல் லூர்து அன்னை ஆலயத்தில் கல்லூரியின் வரலாற்றை மாணவர்கள் கூத்து மூலம் வெளிப்படுத்தி பின்னர் வாகன பேரணி மாதகலூடாக பண்டத்தரிப்பை அடைந்து பின்னர் மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது. இந்நிகழ்வில் பாடாசாலையின் மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், அதிபர் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

# வறட்சியைச் சமாளிக்க பவுஸர் மூலம் குடிதண்ணீர்

### ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவிப்பு



நாட்டில் நிலவும் குடிநீர் தட்டுப் பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் நாடளாவியரீதியில் 15 மாவட்டங்களுக்கு பவுஸர் மூலம் குடிநீர் விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ நிலையத் தின் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய வறட்சியான காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 90 ஆயி ரத்தை எட்டியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவமத்தியநிலையம் அறிவித் துள்ளது.

குறிப்பாக வறட்சியான காலநிலை காரணமாக 15 மாவட்டங்கள் மற்றும் 52 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக குறித்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, அந்தப் பகுதிகளில் 54 ஆயிரத்து 979 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 83 ஆயிரத்து 38 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்தில் மாத் திரம் 75 ஆயிரத்து 287 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் 70 ஆயிரத்து 238 பேர் யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிப்பவர்கள் எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் நாட்டில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் பவுஸர் மூலம் குடிநீர் விநியோ கிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தி ன் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார். (05)

## மலையகத்தில் அபிவிருத்திகளை முன்னெடுக்கவுள்ளது ஜப்பான்



மலையக பெருந் தோட்ட மக்களின் வாழ்வாதார மேம் பாட்டுக்காக தம்மால் முடிந்த அனைத்து உதவிகளும் வழங்கப் படும் என்று ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் உறுதிய ளித்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மற் றும் ஜப்பான் சர்வ தேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் பிரதி நிதிகளுக்கும், நீர்வ- ழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளுக் கும் இடையிலான சந்திப்பு ஒன்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

இலங்கையின் நீர் வளத்துறை, மலையக பெருந்தோட்ட சமூகத்தினர் எதிர்நோக்கும் சவால்கள் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையா டப்பட்டுள்ளன.

மேலும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடி காலமைப்பு சபையின் தற் போதைய செயல்திறன் மற்றும் அதனை எவ்வாறு மேம்படுத்துதல் என்பது தொடர்பாகவும் சுகாதார, பாதுகாப்பான நீர் உற்பத்தி ஆற்றல் தேவையை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறை கள் பற்றியும் ஆராயப்பட் டுள்ளது.

அதேநேரம் சூரிய சக்தி மின் திட்டத்துக்கான முதலீ டுகள் பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அதிகார சபையின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான புதிய தொழில்நுட்பம் பற்றி ஆராயும் நடவடிக்கையில் ஜப்பானிய தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்க ஜப்பான் சர்வதேச ஒத்து ழைப்பு நிறுவனத்தின் பிரதி நிதிகள் உறுதியளித்துள்ளனர்.

அத்துடன் பெருந்தோட்டத் துறையின் மறுசீரமைப்பு தொடர்பான தமது திட்டத்தை அமைச்சர் இதன்போது தெளிவுபடுத்தியுள்ளார்.

பெருந்தோட்டத்துறைம க்கள் எதிர்நோக்கும் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட இதர பிரச்சினைகளும் சுட் டிக்காட்டப்பட்டுள்ளதுடன் மலையக மாற்றத்துக்கான புதிய திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் மலையக பெருந்தோட்ட சமூகங்களின் நிலைமைகளை மேம்படுத் தும் முயற்சிகளுக்கு தமது முழு ஆதரவு வழங்கப்படும் என ஜப்பான் சர்வதேச ஒத் துழைப்பு நிறுவன பிரதிநிதி கள் இந்தச் சந்திப்பின் போது உறுதியளித்துள்ளனர். (05)

## குறைந்த வருமானம் பெறும் பட்டியலில் இலங்கையும்

*மிகக்குறைந்தவருமா னத்தைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுவதாக வெரிடே ரிசர்ச் முன் னெடுத்துள்ள ஆய்வில் தெரியவந்துள்ளது.*

*அதன்படி கடந்த 17 வருடங்களில் இலங்கை தமது வரு மான இலக்குகளை அடையத்தவறியுள்ளதாக அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.*

*மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் 12 நிகழ்ச்சி திட்டங்களில் 3 திட்டங்களை மட்டுமே இலங்கை எட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நாட்டை விற்பதற்கு முயற்சி!

## மரிக்கார் எம்.பி. குற்றச்சாட்டு




இலங்கையிலுள்ள குழந்தைகள் இந்திய சீன மொழிகளைக் கற்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறிய கதையைக் கேட்கும் போது இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நாட்டை விற்கப் பார்க்கிறார்களா என்று கேட்கத் தோன்றுகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

முன்பெல்லாம் வெள்வேறு முதலீட்டாளர்கள் எங்களிடம் வந்து முதலீடு குறித்து பேசி செயற்படுவர். ஆனால் இப்போது அப்படி இல்லை,

இந்தியாவுக்குச் சென்று விற்றுவிட்டதை நாம் அறியோம். இன்னும் என்ன சொல்வதென்று தெரியவில்லை. நிதி குறித்த முழு அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்துக்கும் தெரியவில்லை.

அதானியிடம்என்னபேசினார்கள் என்றும்இந்தியாசென்றபோதுஎன்ன செய்தார்கள் என்றும் தெரியவில்லை. அதானிக்கு என்ன விற்றார்கள் என்றும் தெரியவில்லை. இவற்றுக்கு மத்தியில் சீன ஆராய்ச்சி கப்பல் விவகாரத்தால் இந்தியா மீண்டும் குழப்பமடைந்துள்ளது.

இன்னொரு பக்கம் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள். இன்னொரு பக்கம் இலங்கைப் பிள்ளைகள் சீன ஹிந்தி கற்க வேண்டும் என்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் முதல் பாடசாலைகல்வியைகற்பதற்குரியஏற்பாடுகளை முறையாக வழங்க வேண்டும். பொருள் களின் விலை, மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம் அதிகரித்திருப்பதாலும் தரம் குறைந்த மருந்தாலும், மருந்தின் விலை மிக அதிகமாக உயர்ந்ததாலும் வைத்தியசாலைக்குச் சென்று சாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப முடியாமல் பெற்றோர்கள் தவிக்கின்றனர்.

இவ்வாறு இருக்கும்போது இன்று நாட்டின் பிள்ளைகள் சீன ஹிந்தி மொழிகளை கற்கச் சொல்கிறார்கள்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமது அரசாங்கம் அமைக்கப்பட்டு சஜித் பிரேமதாஸ பிரதமரான பின்னர், ஜனாதிபதி தேர்தலை திட்டமிட்டபடி விரைவில் நடத்த ஏற்பாடு செய்வோம்.

பலம் வாய்ந்த அரசியல் கட்சியால் ஜனாதிபதி வேட்புமனுவைபெற்றுக்கொள்ளதற்போதைய ஜனாதிபதியால் முடியாது. - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## ஹெரோயின் வைத்திருந்தாரென பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

### மன்னாரில் சம்பவம்

ஹற்றனிலுள்ள பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் மன்னாரைச் சேர்ந்த பொலிஸ் கொன்ஸ்டபில் ஒருவர் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் புதன்கிழமை மன்னாரில் வைத்து புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 28 வயதானவர் என்றும் அவரிடம் இருந்து 100 மில்லிகிராம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



## மாளிகைக்காடு சபீனாவில் சேவை நலன் பாராட்டு!







கல்முனை கல்வி வலய மாளிகைக்காடுகமு/கமு/சபீனாமுஸ்லிம் வித்தியாலத்தில் ஆசிரியர்களாக சேவையாற்றிஅண்மையில்ஓய்வுபெற்ற ஆசிரியர்களானஏ.ஆர்.ஏ.றஷீட் மற்றும் திருமதிஜெ.இஸ்மாலெவ்வைஆகியோரின் சேவையைப் பாராட்டுமுகமாக ஆசிரியர்நலன்புரிக்குழுவால்ஏற்பாடு செய்யப்பட்ட சேவை நலன் பாராட்டு நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த பாராட்டு விழாவில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சஹுதுல் நஜீம் கொண்டதுடன் கௌரவ அதிதியாக காரைதீவுகோட்டக்கல்விப்பணிப்பாளர் ஜே. டேவிட் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில்எதிர்வரும்ஒக்ரோபர் மாதம் ஓய்வுபெறவுள்ள காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜே.டேவிட் அவர்கள் பாடசாலை சமூகத்தினரால்பொன்னாடைபோர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் பாடசாலை பிரதியதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

## தனியார் வைத்தியசாலைகளில் கிழக்கில் திடீரெனச் சோதனை

கிழக்குமாகாணசுகாதார சேவைகள்பணிப்பாளருடன் இணைந்துகல்முனைபிராந்தியசுகாதாரசேவைகள்பணிமனையினர் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற தனியார் வைத்தியசாலைகளில் எழுமாறான பரிசோதனைகளை மேற்கொண்டன.

மருந்துகளின் விலை, காலாவதித் திகதி, மயக்க மருந்துகளின் பாவனை, களஞ்சியப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் நீண்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த விஜயத்தில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் மெலிண்டன் கொஸ்தா, கல்முனைபிராந்தியசுகாதாரசேவைகள்பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம் றிபாஸ், சுற்றுச்சூழல் மற்றும் தொழில்வாண்மைசுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம் பௌசாத், உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ். ஜீவராஜா மற்றும் பிராந்திய மேற்பார்வை மருந்தாளர் திருமதி இந்திர குமார் உள்ளிட்ட சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## உள்நாட்டு இறைவரி சட்டத்தில் விரைவில் திருத்தம் – அமைச்சர்



அரச வரிப் பொறிமுறையை மேம்படுத்தும் வகையில் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை விரைவில் திருத்த நடவடிக்கை எடுக்கப்படுமென தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு என்ற வகையில் தேசியபொருளாதாரத்தைக்கட்டியெழுப்ப, வரிவிதிப்பதை முறைமைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கமைய பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டுவருதல், வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரித்தல் மற்றும் அரச வரி வருமானத்தை அதிகரித்தல் ஆகிய விடயங்களில், அரசாங்கம்எதிர்பார்க்கும்இலக்குகளுக்கு செல்ல முடியுமா என்பது தொடர்பில் எமது குழு ஆராய்ந்து வருகின்றது.

மேற்குறிப்பிட்ட பிரதான 03 இலக்குகளையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் அடைய வேண்டியுள்ளது. அரச வரிவருமானத்தை அதிகரிப்பதைத்தவிர ஏனைய இலக்குகளில் நாம் ஓரளவு திருப்திகரமான நிலைக்கு வந்துள்ளோம்.

அந்த வகையில், அரசுக்கு அதிக வருமானத்தை ஈட்டித்தரும் நிறுவனங்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் இலங்கை மதுவரித் திணைக்களம் ஆகிய 3 நிறுவனங்களையும், குழு வில் முன்னிலையாகுமாறு அழைத்திருந்தோம்.

2023 ஆம் ஆண்டில் அரசு எதிர்பார்த்துள்ள அரச வரி வருமானம், 3,105 பில்லியன்களாகும். ஆனால் அவற்றில் இந்த மூன்று நிறுவனங்களில் இருந்தும் இதுவரை, 1,179 பில்லியன்களே கிடைத்துள்ளது. அது அறவிடப்பட வேண்டிய வரியில் 38 சத வீதமாகும்.

இந்தஆண்டுடிசெம்பர்மாதத்திற்குள் உரிய இலக்குகளை எட்ட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு அறிவித்துள்ளது. அந்த வகையில், அரச வரி வருமானம் தொடர்பான இலக்கை இந்த மூன்று நிறுவனங்களுக்கும் அடைய முடியுமா என்பது குறித்து நாம் ஆராய்ந்தோம்.

இந்த நிறுவனங்களை முறையான மறுசீரமைப்புகளுக்கு உட்படுத்தாது அரசு எதிர்பார்த்துள்ள இலக்குகளுக்கு செல்ல முடியும்என்றுநாம்நம்பவில்லை. எனவே இது குறித்து நாம் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளோம்.

எமது நாட்டு மொத்த சனத் தொகையில், தனிப்பட்ட கோப்புகளின் படி ஒரு நாளுக்கு 29,000 பேரே ஒரு ரூபாவேனும் வரி செலுத்துகின்றனர். வரி செலுத்தாமல் நான்கு மேன்முறையீடுகளைசமர்ப்பிக்கக்கூடிய ஒரே நாடு இலங்கை மட்டுமே.

அந்த 4 மேன்முறையீடுகளை ஆய்வு செய்ய 15 ஆண்டுகள் செல்லும். அப்படியானால், இந்நாட்டு மக்கள் எவ்வாறு வரி செலுத்த முடியும்?

எனவே, வரிக்கொள்கை தொடர்பில், கவனம் செலுத்தியுள்ளதாகவும் நீதி அமைச்சின் உதவியுடன் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டியமறுசீரமைப்புகள்தொடர்பான வரைவு தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. வரி செலுத்துவது குறித்து முன்வைக்கக் கூடிய நான்கு மேன்முறையீடுகளை இரண்டாகக் குறைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவேஇவ்வாறுவரிசெலுத்தவேண்டியவர்கள்பல்வேறுமேன்முறையீடுகளை முன்வைத்தும் தமது வருமானத்தை சரியாக கணக்காய்வுக்கு உட்படுத்தாமலும், வரி செலுத்துவதை தவிர்த்து வருகின்றனர்.

முறையான கணக்காய்வுகள் மூலம் இவ்வாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம், முழுமையாக கிடைக்குமாயின் வெளிநாடுகளிடம் கடன் பெறவேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்படாது.

'உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 08 பில்லியன் ரூபா செலவில் கணனித் தரவுக் கட்டமைப்பு ஒன்றை தயாரித்துள்ளது. ஆனால், 10 ஆண்டுகளாகியும் இந்தக் கட்டமைப்பை செயல்படுத்த அதிகாரிகள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இந்தத் தரவுக் கட்டமைப்பில் 42 நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

தரவுக் கட்டமைப்பை நடைமுறைப் படுத்தினால் அவர்கள் விரும்பியபடி செயல்பட முடியாது. அதனால்தான் டிஜிட்டல் மயமாக்கலின் ஊடாக அரச பொறிமுறையில் உள்ள அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து இவ்வாறு நிகழும் முறைகேடுகளைத் தடுப்பதற்கான பணிகளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்து வருகின்றார்.

அரச வருமானத்தில் 90சதவீத வரி வருமானம் ஆகும். இந்நாட்டு மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுவதும், நாட்டின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதும், அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதும் அரசாங்கத்துக்கு கிடைக்கும் வரிவருமானத்தின் மூலமே ஆகும்.

அரசுக்கு வரி செலுத்தாத பலம் மிக்க தொழிலதிபர்கள் நாட்டில் உள்ளனர். உள்நாட்டுஇறைவரித்திணைக்களம் அவற்றைக் கவனித்ததா? என்ற கேள்வி உள்ளது. சாதாரண மக்களிடம் வரி வசூலிப்பதை விட, வசூலிக்க வேண்டியவர்களிடம் வரி வசூலித்திருந்தால், அரச வரிவருமானத்தை அதிகரித்திருக்கலாம்.

எனவே முறையான கணக்காய்வுகளின் ஊடாக வரி வருமானத்தை அதிகரிப்பதுகுறித்துஉள்நாட்டுஇறைவரித் திணைக்களம் மீண்டும் சிந்திக்க வேண்டும். அறவிடப்பட வேண்டிய வரி வருமானத்தை வசூலிப்பதற்கு சரியானபொறிமுறைஇல்லாமைகுறித்து அரசாங்கம்கடுமையானதீர்மானங்களை எடுக்க வேண்டும்- என்றார்.

## வருடாந்தம் 5 மில்லியன் சுற்றுலாவிகள் இலக்கு



வருடாந்தம் 05 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான வேலைத் திட்டத்தை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடியதும், சிறந்த சுற்றுலாவசதிகளைகொண்ட இடமாகவும் இலங்கையை மாற்றுவதற்கான குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இலங்கையில்சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக தற்போது முன்னெடுக்கும் திட்டங்கள் மற்றும் தனியார் துறையின் பங்களிப்பு குறித்து அதிகாரிகளிடம் ஜனாதிபதி கேட்டறிந்ததோடு, நடைமுறைச்செயற்பாடுகள் மற்றும் புதியநிலவரங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

இலங்கையை ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக கட்டமைப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுக்கமைய சுற்றுலா அமைச்சும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களும் 2025 ஆம் ஆண்டு வரையான மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்து வருகின்றன. அந்தப் பணிகள் 95 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் இங்கு குறிப்பிடப்பட்டது.

தனியார் துறையினரின் பங்களிப்புடன் உயர்தர ஹோட்டல் பாடசாலையொன்றைநிர்மாணிப்பதற்கு பொருத்தமான கட்டிடம் ஒன்றை தேடுமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தங்குமிட வசதிகளை மேம்படுத்தும் வகையில், தற்போது பயன்படுத்தப்படாதபாரம்பரிய தோற்றம்கொண்டகட்டிடங்கள் மற்றும் பங்களாக்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்குமாறும், தற்போதுவரையில்சுற்றுலாப் பயணிகளின் கவனத்திற்கு உட்படாத பகுதிகளை கண்டறியுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

புதிய முதலீடுகளுக்கு உகந்த சூழலை நாட்டிற்குள் உருவாக்குவதற்கான முதலீட்டு உட்கட்டமைப்பு கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவப்பட்டு, கொள்கை ரீதியிலான் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான சபையொன்றை ஸ்தாபிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் முதலீட்டு வலயங்கள், சுற்றுலா வலயங்கள், தொழில்நுட்ப வலயங்கள் என்பவற்றை அதன் கீழ் நிறுவத்திட்டமிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய 09 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில், சுற்றுலாச் சபைகளை ஸ்தாபிக்கவும் ஒவ்வொரு சபைகளின் கீழ் பிராந்திய குழுக்களை நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.08.2023இல் வெளியிடப்பெற்றது.